

## பல்லடம் ஊராட்சி ஒன்றியத்தில்

# ரூ.1.98 கோடி மதிப்பிலான 22 திட்டப்பணிகள்: அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார்

**திருப்பூர், மே 25–**

திருப்பூர் மாவட்டம் பல்லடம் ஊராட்சி ஒன்றியம் செம்மிபாளையம் மற்றும்

ஆறுமுத்தாம்பாளையம் ஊராட்சிகளில் ரூ.1.98 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் 22 திட்டப்பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கோ.மலர்விழி தலைமையில் துவக்கி வைத்தார்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கூறியதாவது:

"தமிழக முதலமைச்சர் மாநில மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை தொடங்கியிருக்கிறார்.

அவர் உத்தரவின் பேரில் மாநிலம் முழுவதும் நடைமுறையில் உள்ள திட்டப்பணிகளை விரைவாக மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் செயல்படுத்துமாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் இந்த திட்டப்பணிகளும் தொடங்கப்படுகின்றன," என்றார்.

இந்நிகழ்ச்சியில், பல்லடம் வட்டார வளர்ச்சி அலுவலர் பானுபிரியா, உதவி பொறியாளர் சண்முகவடிவு மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.



# ஈரோடு பேபி வாய்க்கால் தூர்வாரும் பணி: அமைச்சர் முத்துசாமி தொடங்கி வைத்தார்

**ஈரோடு, மே 25–**

ஈரோடு மாவட்டம் காளிங்கராயன் வாய்க்கால் வலது கரையில் அமைந்துள்ள பேபி வாய்க்கால் தூர்வாரும் பணியினை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

ஈரோடு மாவட்டத்தில் பவானி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள காளிங்கராயன் அணைக்கட்டிலிருந்து காளிங்கராயன் வாய்க்கால் மூலம் 15,743 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது.

காளிங்கராயன் வாய்க்காலில் மைல் 0/0 முதல் 12/3 வரை கழிவுநீர் கலக்காமல் இருக்க வலது கரையில் பேபி வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பேபி வாய்க்காலானது மண் மற்றும் புதர்களால் நிரம்பியுள்ளதால் சுமார் 20 கி.மீ நீளத்திற்கு தூர்வாரும் பணிகளை மேற்கொள்ள ரூ.28.25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக விவசாயிகளின் கோரிக்கையினை நிறைவேற்றிடும் வகையில் பேபி வாய்க்கால் தூர்வாரும் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஒரு மாத காலத்திற்குள்ளாக இப்பணிகளை முடித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் காளிங்கராயன் வாய்க்காலில் மற்ற முன்னேற்ற பணிகளை செயல்படுத்துவதற்காக அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், கண்காணிப்பு பொறியாளர் (பொதுப்பணித்துறை, நீர்வளம்) கோபி, செயற்பொறியாளர் திருமூர்த்தி, உதவி செயற்பொறியாளர் உதயகுமார்,

உதவி பொறியாளர் சபரிநாதன், ஈரோடு வட்டாட்சியர் முத்துகிருஷ்ணன் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம் தேவர்சோலை பேரூராட்சிக்கு உட்பட்ட கோத்தாடி பழங்குடியின கிராமத்தின் அடிப்படை வசதிகள் மற்றும் அப்பகுதி மக்களின் கோரிக்கைகளை கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு, கேட்டறிந்தார். உடன் கூடலூர் கோட்டாட்சியர் (பொ) சங்கீதா உட்பட பலர் உள்ளனர்.




## கோவை ஈச்சனாரியில் அமைந்துள்ள

# அபிராமி கல்வி நிறுவனங்களில் 4 புதிய பட்டப் படிப்புகள் துவக்கம்; புதிய கட்டிடங்கள் திறப்பு

**கோவை, மே 25–**

கோவை ஈச்சனாரி பகுதியில் உள்ள ஸ்ரீ அபிராமி கல்வி நிறுவனங்களில் 4 புதிய பட்டப்படிப்புகள் மற்றும் புதிய கட்டிடங்களின் திறப்பு விழா நிகழ்ச்சி 'அபிராமி இம்பேக்ட் 2025' என்ற பெயரில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஸ்ரீ அபிராமி கல்வி நிறுவன தலைவர் டாக்டர் பி பெரியசாமி தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில், இணை தலைவர் டாக்டர் குந்தவிதேவி, நிர்வாக இயக்குனர்கள் டாக்டர் செந்தில்குமார், டாக்டர் பாலமுருகன், டாக்டர் உமாதேவி, சுசரீதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் இயக்குனர் டாக்டர் செந்தில்குமார் பேசும்போது,

சர்வதேச தரத்திற்கேற்ப கல்வி வழங்குவதல், ஆராய்ச்சி திறன்களை மேம்படுத்துதல் வழியே, எதிர்கால சுகாதார துறையை வடிவமைக்க, இந்த புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

### 4 பாடப்பிரிவுகள் துவக்கம்

சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழக துணைவேந்தர் நாராயணசாமி கலந்து கொண்டு, நிறுவனத்தின் புதிய கார்ப்பரேட் அலுவலகம், அபிராமி மருந்தியல் கல்லூரியின் விலங்குகள் ஆய்வு மையம் மற்றும் ஸ்ரீ அபிராமி மருத்துவம் மற்றும் பாராமெடிக்கல் படிப்பிற்கு மேலும் பெருமை சேர்க்கும் விதமாக ஏஎச்எஸ் மற்றும் டிஎன்பி யின் புதிய பாட பிரிவுகளான மெடிக்கல் பி.எஸ்சி. மருத்துவ ஆய்வக தொழில்நுட்பம், பி.எஸ்.சி. விபத்து மற்றும் அவசர சிகிச்சை தொழில்நுட்பம், பி.எஸ்சி. கார்டியோ நுரையீரல் பெர்ஃப்யூஷன் கேர் டெக்னாலஜி, மூச்சுயிர்ப்புச் சிகிச்சை, டிஎன்பி– பொது அறுவை சிகிச்சை, அவசரகால மருத்துங்கள், எலும்பியல் போன்ற பாட பிரிவுகளை துவக்கி வைத்தார்.

பின்னர் அவர் பேசுகையில், மருத்துவ துறையில் பயில்வோர் ஈடுபாட்டுடன், தனித்திறமையை வளர்த்து கொள்ள வேண்டும். துறை சார்ந்த கூடுதல் படிப்புகளை கற்பது நல்லது.

எதிர்கால சுகாதாரக் கல்விக்கான அபிராமி நிறுவனத்தின் இலக்கை பாராட்டி பேசினார். தொடர்ந்து அபிராமி தமிழ் மன்றம் துவக்க விழா நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இவ்விழாவில் டீன் ஜெயபாரதி, கல்லூரி முதல்வர்கள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




# கல்வி, ஆராய்ச்சியில் சிறந்தவர்களுக்கு 'லெகஸி விருது': கேபிஆர் தலைவர் கே.பி.ராமசாமி வழங்கி வாழ்த்து

**கோவை, மே 25–**

பொறியியல், தொழில் மேலாண்மை, கலை மற்றும் அறிவியல் துறைகளில் சிறந்து விளங்கிய கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களை அங்கீகரிக்கும் நோக்கில், கேபிஆர் கல்வி நிறுவனம் நடத்திய 'கேபிஆர் லெகஸி விருதுகள் 2025' விழா விமரிசையாக நடைபெற்றது.

கேபிஆர் குழும தலைவர் கே.பி. ராமசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஏஐசிடிஇ தலைமை ஒருங்கிணைப்பாளர் மற்றும் அனுவதினி ஏஐ நிறுவத்தின் தலைமை செயல் அதிகாரியான புத்த சந்திரசேகர் தலைமை விருந்தினராக கலந்து கொண்டார்.

விழாவில் பேசிய கே.பி. ராமசாமி, கல்வி என்பது எந்த நாட்டின் வளர்ச்சிக்கும் அடிப்படை எனக் குறிப்பிட்டார். "மாற்றத்தை உருவாக்கும் ஆராய்ச்சிகளும், புதிய பாதைகளை உருவாக்கும் கல்வியாளர்களும் எப்போதும் ஊக்குவிக்கப்பட வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக பேசிய புத்த சந்திரசேகர், பெண் பணியாளர்களுக்கு கல்வி வாய்ப்பு அளிப்பதன் மூலம் பெண்களின் சமூக முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் என்று கூறினார்.

மேலும், செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி, அதனைச் சுற்றியுள்ள தரவு பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகள் குறித்து எளிய முறையில் விளக்கினார்.

இந்த ஆண்டுக்கான கேபிஆர் லெகஸி விருதுகள் விழாவில், "வளரும் கல்வியாளர்", "புகழ்பெற்ற பேராசிரியர்", "சிறந்த ஆராய்ச்சியாளர்", "நட்சத்திர முன்னாள் மாணவர்" மற்றும் "வாழ்நாள் சாதனையாளர்" ஆகிய ஐந்து பிரிவுகளில் இந்தியா முழுவதிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட 13 கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

வெற்றி பெற்றவர்களுக்கு கேடயம் மற்றும் ரூ.25,000 பரிசுத்தொகை வழங்கப்பட்டது.

விழாவின் சிறப்பான விருதான வாழ்நாள் சாதனையாளர் விருது, பிஎஸ்ஜி தொழில்நுட்பக் கல்லூரியின் கட்டட பொறியியல் பேராசிரியரான எஸ்.ராஜசேகரனுக்கு, துறையில் அவருடைய நீண்டகால பங்களிப்புக்காக வழங்கப்பட்டது. இதன் கீழ் ரூ.1,00,000 பரிசுத்தொகையும் வழங்கப்பட்டது.

இந்த விருதிற்காக நாடு முழுவதும் வந்த 2,000க்கும் மேற்பட்ட விண்ணப்பங்களில் இருந்து, கல்வி மற்றும் தொழில்துறைகளைச் சேர்ந்த 21 பேர் கொண்ட குழுவினரால் மதிப்பீடு செய்யப்பட்டு, சிறந்தவர்கள் தேர்வு செய்யப்பட்டதாக விழாவில் தெரிவிக்கப்பட்டது.


ADITYA BIRLA CAPITAL
PROTECTING INVESTING FINANCING ADVISING

**ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட்**

பதிவு அலுவலகம் : இந்தியன் ரயான் காம்பவுண்ட், வேரவல், குஜராத் 362 266.
கிளை அலுவலகம்: 12வது தளம், ஆர் டெக் பார்க், நிர்லான் காம்ப்ளக்ஸ், ஹப் மால் அருகில், கோரேகான் (கி), மும்பை 400 063, மகாராஷ்டிரா.

**மின்– ஏல விற்பனை அறிவிப்பு**

**2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 8(6)ன் கீழ் அசையா சொத்துக்கள் மின்னணு ஏல விற்பனைக்கான 30 நாட்கள் விற்பனை அறிவிப்பு**

ஆதித்ய பிர்லா பைனான்ஸ் லிமிடெட் மற்றும் ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட் இடையேயான ஒருங்கிணைப்பின் காரணமாக, 24.03.2025 அன்று அகமதாபாத்தில் உள்ள தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் முறையாகப் பதிவுசெய்யப்பட்ட 11.03.2024 தேதியிட்ட ஒருங்கிணைப்புத் திட்டத்தின்படி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடமானம் வைக்கப்பட்ட சொத்து தொடர்பாக ஆதித்ய பிர்லா பைனான்ஸ் லிமிடெட் தொடங்கிய அனைத்து SARFAESI நடவடிக்கைகளும், ஒருங்கிணைந்த நிறுவனமான ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / ஈடுபெற்ற கடன் வழங்கியவர், ஈடுபெற்ற கடனாளியின் ஈடுபெற்ற கடன்களை மீட்டெடுப்பதற்காக, 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை சட்டம் (SARFAESI) பிரிவு 13(2) இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகைகளுக்கு, பின்வரும் கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்களிடம் இருந்து கூடுதல் கட்டணங்கள் மற்றும் செலவுகளுக்காக, பின்வரும் ஈடுபெற்ற சொத்துக்களை சுவாதீனம் எடுத்துள்ளார். ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன்களை அடைப்பதற்காக பின்வரும் சொத்து மின்னணு ஏலம் மூலம் "எங்கே எப்படி உள்ளதோ அப்படியே", "உள்ளது உள்ளபடி" மற்றும் "எந்தவித மாற்றமும் இல்லாத" என்ற அடிப்படையில் விற்பனை நடைபெறும் என்று இதன் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் அறிவிக்கப்படுகிறது.

**மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம்: 02.07.2025, காலை 11:00 மணி முதல் பிற்பகல் 01:00 மணி வரை**
**KYC & டேவணித் தொகை டெபாசிட் பெறப்படும் (EMD) : 01.07.2025**

| வ. எண். | கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்கள் பெயர் | சொத்துகள் /ஈடுபெற்ற ஆஸ்திகள் குறித்த விவரம் மற்றும் சுவாதீனத் தேதி | ரிசர்வ் விலை (ரூ.) | டேவணித் தொகை டெபாசிட் (EMD) (ரூ.) / அதிகரிப்பு மதிப்பு (ரூ.) | கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் மொத்த தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1 | 1. திரு ஈஸ்வர மூர்த்தி பொன்னுசாமி<br>2. திருமதி கோகிலா<br><br>கடன் கணக்கு எண்.<br>: ABERDSTS000000560806 | பழைய சர்வே எண்.11/1 புதிய நத்தம் ஆர்.எஸ். எண் 164/18, 164/19, 164/20, 164/21, 164/23 மற்றும் 164/24 பொன்முடி கிராமம், பெருந்துறை தாலுகா, பெருந்துறை சார் பதிவு அலுவலகம், ஈரோடு பதிவு மாவட்டம், தமிழ்நாடு 638056ல் இந்த சொத்து உள்ளது. அதன் எல்லைகள் :<br>கிழக்கு : வடக்கு தெற்காக தெரு மற்றும் நத்தம் ஆர்.எஸ். எண். 164/22,<br>மேற்கு : வீட்டு நிலம், சந்திரனுக்கு இன்னும் செட்டில்மெண்ட் வழங்கப்படவில்லை, வடக்கு: 2வது அயிட்டம் சொத்து மற்றும் நத்தம் ஆர்.எஸ். எண். 164/22, தெற்கு : நத்தம் ஆர்.எஸ். எண். 164/25,26,27 மற்றும் 28. | ரூ.22,80,000/- (ரூபாய் இருபத்தி ரெண்டு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) | ரூ. 2,80,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்)<br><br>ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) | 21.05.2024 மற்றும் 10.05.2024 அன்று ரூ.20,34,883.26/- (ரூபாய் இருபது லட்சத்து முப்பத்து நான்காயிரத்து எண்ணூற்று எண்பத்து மூன்று மற்றும் இருபத்தாறு பைசா மட்டும்) |

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, **ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட்** / ஈடுபெற்ற கடன் வழங்கியவரின் இணையதள இணைப்பைப் பார்க்கவும். **https://abfl.adityabirlacapital. com/Pages/Individual/Properties-for-Auction-under-SARFAESI-Act.aspx or https://BidDeal.in**

**தொடர்பு எண்கள்: ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி 1) திரு. அபூர்வா தாமஸ் தந்தி :** apoorva.danthi@adityabirlacapital.com, **மொபைல் எண். 9930909725, நீங்கள் அருகிலுள்ள கிளைக்குச் செல்லலாம் அல்லது ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட்டைத் தொடர்பு கொள்ளலாம் 2) திரு. ஜாஹிருல் லஸ்கர் :** (Jahirul.Laskar@adityabirlacapital.com) **மொபைல் எண். +91 97060 03075, 3) பர்னீத் சிங் :** (parneet.singh@adityabirlacapital.com) **மொபைல் எண். +91 97200 29337, 4) திரு. ஸ்ரீகாந்த் :** srikanth.s@adityabirlacapital.com **மொபைல் எண். 98840 02027**

**இடம் : ஈரோடு, தமிழ்நாடு**
**தேதி : 25.05.2025**

**ஒப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,**
**ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட்**